**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII code of Criminal Procedure)
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**
CC.NO-233/2019

List of Witness LW 1 Examined as PW 1

| | | | |
|---|---|---|---|
| Name | நாராயணன் | Caste: | |
| Father's name | அருணாச்சலம் | Calling: | அடகு கடை |
| Village | தஞ்சாவூர் | Religion: | Hindhu |
| Taluk | தஞ்சாவூர் | Age: | 52 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06/07/2022.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கந்தர்வகோட்டையில் அடகு கடை வைத்து தொழில் செய்து, தஞ்சாவூரில் வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். 21.08.2006 ல் நான் கந்தர்வகோட்டையில் எ.ஆர்.என். பேங்கர்ஸ் என்ற பெயரில் அடகு கடை ஆரம்பித்தேன். நான் கடை ஆரம்பித்த அன்றைய தினத்தில் இருந்து கிருஷ்ணன் என்பவர் தான் பார்த்து வந்தார். 21.05.2011 ம் தேதி முதல் அதன் பின்னிட்டு ஆறு மாதம் வரை என்னால் கடைக்கு நேரடியாக சென்று கணக்கு வழக்குகளை பார்க்க முடியவில்லை. 21.05.2011 தேதிக்கு முன்னர் கிருஷ்ணனுக்கு உடல் நிலை சரியில்லாமல் கால் முறிவு ஏற்பட்டுவிட்டது. அதனால் கிருஷ்ணன் என்னிடம் அடகு கடை என்பதால் ஆள் தேவைப்படுகிறது என்று அவருடைய மனைவி ஜகதாம்பாளையும், அவரது மகன் அண்ணாமலை என்பவரையும் உதவிக்கு வேலைக்கு வைத்துக் கொள்வதாக என்னிடம் கேட்டார். நானும் அடகு கடை என்பதால் வெளி ஆட்கள் இல்லாமல் அவர்களையே வைத்து கொள்ளலாம் என்று பணி செய்ய அனுமதி கொடுத்தேன்.

நான் வெளிநாடு மற்றும் வெளி மாநிலங்களுக்கு பணி தொடர்பாக சென்றதால் என்னால் சரிவர கணக்கு வழக்குகளை பார்க்க முடியவில்லை. வெளிநாட்டில் இருந்து நான் வந்த பின்னர் கடையின் கணக்கு வழக்குகளை பார்ப்பதற்காக 05.12.2011 ற்கு பின்னர் கணக்கு வழக்குகளை பார்ப்பதற்காக கடைக்கு சென்றேன். அப்பொழுது குறிப்பு பேரேடு, மற்ற கணக்கு புத்தகங்களை கேட்டதற்கு கிருஷ்ணன் வீட்டில் வைத்து இருப்பதாகவும், அடுத்த முறை கொண்டு வருவதாகவும் சொன்னார். இருந்தாலும் எனக்கு சந்தேகமாக இருந்தது. அடகு ரிஜிஸ்டரையும், ஸ்டாக்கையும் ஒத்து பார்த்து விடலாம் என்று கணக்கு பார்த்தேன். அதில் ஸ்டாக்கில் சார்டேஜ் வந்தது. கணக்கில் ரூபாய் 30 இலட்சம் வரை வித்தியாசம் வந்தது. பின்னிட்டு முழுமையாக கணக்கு பார்த்த பின்னர் 28,35,595 ரூபாய் வித்தியாசம் வந்ததால் நான் கந்தர்வகோட்டை காவல் நிலையத்தில் இது தொடர்பாக எதிரிகள் மீது 27.12.2011

அன்று புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையது. புகார் அசா.**ஆ.1** ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII code of Criminal Procedure)

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, GANDARVAKOTTAI**

CC.NO-233/2019

List of Witness LW 2 Examined as PW 2

| | | | |
|---|---|---|---|
| Name | விசாலாட்சி | Caste: | |
| Husband name | நாராயணன் | Calling: | அடகு கடை |
| Village | தஞ்சாவூர் | Religion: | Hindhu |
| Taluk | தஞ்சாவூர் | Age: | 51 |

Solemly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day of 06/07/2022.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். கந்தர்வகோட்டையில் அடகு கடை வைத்து தொழில் செய்து, தஞ்சாவூரில் வருகிறேன். எதிரிகளை எனக்கு தெரியும். அ.சா.1 என் கணவர். 21.08.2006 ஆம் ஆண்டு கந்தர்வகோட்டையில் எ.ஆர்.என். பேங்கர்ஸ் என்ற பெயரில் அடகு கடை ஆரம்பித்தேன். நாங்கள் கடை ஆரம்பித்த அன்றைய தினத்தில் இருந்து கிருஷ்ணன் என்பவர் தான் வேலை பார்த்து வந்தார். ஐந்து வருடம் கழித்து அவருக்கு 2011 ஆம் வருடத்தில் கிருஷ்ணனுக்கு உடல் நிலை சரியில்லாமல் போய்விட்டது. அதனால் அவருடைய மனைவியையும், மகனையும் வேலைக்கு வரும்படி அவர்கள் கேட்டதன் பேரில் வர சொன்னோம். எனது கணவர் அடிக்கடி வெளிநாடு, வெளியூர் சென்றுவிடுவார். அதனால் அவரால் சரிவர கடையை பார்த்து கொள்ள முடியவில்லை. அவர் இல்லாத நேரத்தில் அடகு கடைக்கு பணம் கேட்டார்கள். நான் என் கணவரிடம் போனில் கேட்டுவிட்டு அவர்களிடம் பணம் கொடுத்து ஒரு நோட்டில் கையெழுத்து வாங்கி கொள்வேன்.

என் கணவர் வந்த பின்னர் கடை கணக்கு வழக்குகளை பார்ப்பதற்காக கணக்கு புத்தகங்களை கேட்டபோது அவர்கள் தரவில்லை. வீட்டில் வைத்து இருப்பதாக சொன்னார்கள். அதன் பின்னர் தான் எங்களுக்கு சந்தேகம் வந்தது. வந்தேகம் வந்த பின்பு தான் வழக்கு தாக்கல் செய்தோம். அவர்கள் சரியான கணக்கு வழக்கை கொடுக்கவில்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை

எதிரி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.